

வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அமைச்சர், கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் சேவூரில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

### வேலூர் சேண்பாக்கம் - தண்டலம் - கிருஷ்ணாபுரம் இடையே

# ரூ. 58 கோடியில் தடுப்பணை கட்டி கொடுத்துள்ளேன்!

## சாதனைகளைக் கூறி அமைச்சர் துரைமுருகன் வாக்கு சேகரிப்பு !

வேலூர், ஏப்.9-

வேலூர் சேண்பாக்கம் தண்டலம் கிருஷ்ணாபுரம் இடையே ரூ.58 கோடியில் தடுப்பணை கட்டி கொடுத்துள்ளேன் என்று வாக்கு சேகரிக்கும் போது அமைச்சரும் கழகப் பொதுச் செயலாளருமான துரைமுருகன் கூறினார்.

காட்பாடி தொகுதியில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. வேட்பாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் காட்பாடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவலம் அடுத்த குப்பத்தா மோட்டூர் அம்முண்டி, அரும்பாக்கம் ,

அரும்பருதி, சேவூர் ஆகிய பகுதிகளிலும் மாலையில் பிரம்மபுரம் கோரந்தாங்கல் தண்டலம் ,சேவூர் ஆகிய பகுதிகளிலும் பிரச்சாரத்தை தொடங்கினார்.

அப்போது அவர் தான் செய்த திட்டங்கள் திமுகவின் சாதனைகள் பற்றி எடுத்து கூறியதாவது 1971 ஆம் ஆண்டு குப்பத்தா மோட்டூரில் பள்ளிக்கூடம் கிடையாது. பஸ் வசதி,குடிநீர் கிடையாது. அப்போது இருந்த ஊராட்சி மன்ற தலைவர் என்னிடம் கேட்டதை தொடர்ந்து, சாலை, குடிநீர், பள்ளிக்கூடம் என அனைத்தையும் நிறைவேற்றி கொடுத்தேன்.

முதலில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு உயர்ந்து தற்போது உயர்நிலைப் பள்ளியாக செயல்பட்டு வருகிறது.

இதையும்செய்து கொடுத்தவன் இந்த துரைமுருகன் தான். இந்த பகுதியில் குடிநீர் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருந்தது. அதையும் தீர்த்து வைத்துள்ளேன் அதற்கு மேலாக இந்த பகுதியில் விவசாயிகள் பயன் பெறும் வகையில் சர்க்கரை ஆலை கொண்டு வந்திருக்கிறேன். சேண்பாக்கம், தண்டலம், கிருஷ்ணாபுரம் இடையே மக்கள் பயன் பெறும்வகையில் பாலாற்றில்ரூ58 கோடியில் தடுப்பணை கட்டி கொடுத்துள்ளேன் இந்த ஐந்து ஆண்டு கால திமுக ஆட்சியில் பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தந்துள்ளார். சிமெண்ட் சாலைகள் போடப்பட்டுள்ளது பல்வேறு அரசு கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது பெண்கள் அரசு பஸ்சில் இலவசமாக எங்கு வேண்டு மானாலும் பயணம் செய்யலாம். மகளிர் உரிமைத்தொகை மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கொடுக்கப் பட்டது அது தேர்தல் முடிந்து முதல் மாதத்திலேயே 2000 ஆக வழங்கப்படும். அதுபோல முதியோர் உதவி தொகை, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு உதவித்தொகை, காலை உணவு திட்டம் எட்டாம் வகுப்பு வரை வழங்கப்படும். தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் ரூ.8,000 மதிப்பான கூப்பன் வழங்கப்பட உள்ளது. அதனை பயன்படுத்தி டிவி மிக்சி கிரைண்டர் மின்விசிறி போன்ற குடும்பத்திற்கு தேவையான பொருட்களை பணம் கொடுக்காமல் கூப்பன் கொடுத்து விட்டு வாங்கிச் செல்லலாம். எனவே உங்களுக்காக பணியாற்ற உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து என்னை வெற்றி பெற செய்யுங்கள். பலமுறை என்னை வெற்றி பெற செய்த உங்களுக்கு பணியாற்ற நான் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

### இராணிப்பேட்டை அம்மூரில் தி.மு.க. வேட்பாளர்

# அமைச்சர் ஆர்.காந்தி அறிமுக கூட்டம்!

## ஜெகத்ரட்சகன் எம்.பி. சிறப்புரை!

இராணிப்பேட்டை ஏப்.,10-

இராணிப்பேட்டை அம்மூரில் மாந்தாங்கல் ரோட்டில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் அமைச்சர் ஆர். காந்தி அறிமுக கூட்டம் நடந்தது. நிகழ்ச்சிக்கு அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றினார்.

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.வினோத் அனைவரையும் வரவேற்று பேசினார். கூட்டத்தில் அமைச்சர், மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி பேசியதாவது: கடந்த 1996ம் ஆண்டு முதல் இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் ஆறு முறை போட்டியிட்டு 4முறை வெற்றி பெற்றுள்ளேன்.

இந்த முறை இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் ஏழாவது முறையாக உங்களை நம்பி வேட்பாளராக நிற்கிறேன். எனவே இந்த தேர்தலில்பெறுவாரியான வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க நிர்வாகிகள் கடுமையாக உழைத்து ஆதரவு தரவேண்டும். கடந்த ஐந்து ஆண்டு ஆட்சி காலத்தில் எனது தொகுதி

நிதியிலிருந்து பல்வேறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ள அனைத்து மக்கள் நலத்திட்டங்களையும் இத்தொகுதியில் முழுமையாக கொண்டு வர பாடுபடுவேன். தி.மு.க. அரசு மகளிர்க்கு மாதந்தோறும் ஆயிரம் உரிமைத் தொகை, பெண்களுக்கு கட்டணம் இல்லா விடியல் பயணம், கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு மடிக்கணினி, பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் ,நான் முதல்வன் திட்டம் உள்பட பல்வேறு சிறப்பான திட்டங்கள் மூலம் ஏராளமானோர் பயனடைந்துள்ளனர்.

தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மகளிர் உரிமைத் தொகை ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படும். முதியோர் ஒய்வூதியம் உயர்த்தப்படும், குடும்பத் தலைவிகளுக்கு வீட்டு உபயோக பொருட்கள் வாங்குவதற்கு ரூ.8000 ரூபாய் கூப்பன் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை தேர்தல்வாக்குறுதி களாக தலைவர் முதலமைச்சர். மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில் மாநில சுற்றுச்சூழல் துணை செயலாளர் வினோத் காந்தி, ஜி.கே.குழுமம் சந்தோஷ் காந்தி,முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் என்.ஜி. பார்த்திபன், மனோகரன், உள்பட கூட்டணி கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### இன்று (10ம் தேதி) மானகிரியில்

# சிவகங்கை மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, ஏப்.,10-

இன்று (பத்தாம் தேதி) சிவகங்கை மாவட்ட கழக அவசர செயற்குழு கூட்டம் மானகிரியில் நடைபெறுகிறது. இதுகுறித்து சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியதாவது.

இன்று (10தேதி) சிவகங்கை மாவட்ட கழக அவசர செயற்குழு கூட்டம் கல்லல் அருகே உள்ள மானகிரி திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ. கணேசன் தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் நாளை (11ஆம் தேதி-சனிக்கிழமை) மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தலைவர், கழக தலைவர்,முதல்வர் தளபதி அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது குறித்தும் நான்கு சட்டமன்ற தொகுதியில் நடைபெறும் தேர்தல் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது.

எனவே அனைத்து மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் சார்பணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இத்தகவலை மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.



சேப்பாக்கம் பகுதி தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து 62 வது வட்டம் மற்றும் 62 (அ) வட்டத்தில் மு.க.தமிழரசு அவர்கள் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தார். உடன் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.மதன்மோகன் எம்.சி, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் பி.கே.பாபு, வட்டச் செயலாளர்கள் ஆர்.ஜெகதீசன், கே.மகேஷ், பி.பிரபாகரன், மூ.சின்னராஜ், கே.கோபி, ஏ.தமீம்அன்சாரி, ஜி.வெங்கடேசன், எம்.சி.பி.இளையராஜா, பா.சிதம்பரம், பி.பாலசந்தர், ரஹ்மத்துல்லா, ராஜராஜன் மற்றும் கூட்டணிக் கட்சி தோழர்கள், கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.




கடலூர் கிழக்கு மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும், கழக வேட்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களை ஆதரித்து, குறிஞ்சிப்பாடி பகுதியில் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை கேட்டு விசிக தலைவர் தொல்.திருமாவளவன் அவர்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், ஒன்றிய கழக செயலாளர் வி.சிவக்குமார், கழக நிர்வாகிகள்,கூட்டணிக்கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.



இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. சார்பில் போட்டியிடும் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி அறிமுக கூட்டத்தில் பேசினார்.உடன்அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன், மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### இதுவரை ரூ.6 கோடியே 45 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 45 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 09-04-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | ஏ.ஆர்.மாரிமுத்து, இலுப்பக்கோரை, கணபதி அக்ரஹாரம் அஞ்சல், தஞ்சை | 25,000/–– |
| 2. | ப.மாரிமுத்து, காளிபாளையம், தாராபுரம், திருப்பூர் – 638 661. | 25,000/– |
| 3. | கே.பிச்சைமணி, 11வது வார்டு, ஜக்கன் தெரு, அல்லிநகரம், தேனி மாவட்டம் | 25,000/– |
| 4. | எம்.ஜார்ஜ், அம்மாபட்டி, கொடைரோடு, நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் | 25,000/– |
| 5. | வி.ஆறுமுகம், கோவிலன்சாத்தான், மல்லல் அஞ்சல், இராமநாதபுரம் | 25,000/– |
| 6. | ஏ.ஆயிஷாகனி, பூலாங்கால் திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் | 25,000/– |
| 7. | சா.தங்கசாமி, கோட்டை தெரு, சுரண்டை, தென்காசி மாவட்டம். | 25,000/– |
| 8. | ஜெ. கலைச்செல்வி, வாகையூர் அஞ்சல், திட்டக்குடி, கடலூர் | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |